செ.வெ.எண் :11 நாள்: 06.04.2021

கரூர் மாவட்டம்

**தள்ளாத வயதிலும் வாக்களிக்க ஆர்வம் காட்டி வாக்குச்சாவடி மையத்திற்கு நேரில் வந்த 91வயது மூதாட்டிக்கு மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் இருகரம் கூப்பி நன்றி தெரிவித்தார்**

**அதன் விபரம் வருமாறு:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைக்கான வாக்குப்பதிவு இன்று (06.04.2021) நடைபெற்றது. கரூர் மாவட்டத்தில் உள்ள அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம்(தனி) மற்றும் குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்றத்தொகுதிகளிலும் சுமூகமான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்றது. கரூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் கரூர், அரவக்குறிச்சி மற்றும் கிருஷ்ணராயபுரம்(தனி) ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வெங்கமேடு எக்குவடாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகளில் மாவட்ட தேர்தல் அலுவலா் ஆய்வு செய்தார். இதில் எக்விடாஸ் மேல்லைப்பள்ளியில் 12 வாக்குச்சாவடி மையங்கள் அமைந்துள்ளது, மாதிரி வாக்குச்சாவடி மையங்களும் இதில் உள்ளது. இந்த மையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து கொண்டிருந்தபோது இனாம் கரூர் எஸ்.பி.காலணியைச் சேர்ந்த ஞானாம்பாள் என்ற 91 வயது மூதாட்டியை ஒரு சக்கர நாற்காலியில் வைத்து வாக்களிக்க அழைத்து வந்தார்கள்.

அவரைப் பார்த்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூதாட்டியின் அருகில் சென்று இந்த வயதிலும் வாக்களிக்க ஆர்வமுடன் வருகை தந்து இருக்கின்றீர்களே உங்களுக்கு என்ன வயது ஆகிறது என்று கேட்டார் அதற்கு பதிலளித்த அந்த மூதாட்டி “எனக்கு 91 வயது ஆகிறது ஒவ்வொரு தேர்தலிலும் தவறாமல் நேரில் வந்து வாக்களிப்பதை வழக்கமாக வைத்துள்ளேன். எப்போதும் நடந்து வந்து வாக்களிப்பேன். இந்த முறை வயது முதிர்வின் காரணமாக நடக்க இயலாததால் சக்கர நாற்காலியில் என்னை அழைத்து வந்துள்ளார்கள்” என்று தெரிவித்தார். அப்போது அவரை அழைத்து வந்தவர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் நேரில் வந்து வாக்களிப்பதை வழக்கமாக வைத்துள்ள மூதாட்டி இந்த ஆண்டு எப்படியும் நேரில் சென்று வாக்களிக்க வேண்டும் என்று தங்களை வற்புறுத்தி அழைத்து வந்ததாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தனர். இதனைக்கேட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் “ 80 வயதைக் கடந்த முதியவர்களுக்கு தபால் வாக்கு அளிக்கும் வாய்ப்பினை இந்தியத்தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளபோதும், வயது முதிர்வையும் கருத்தில் கொள்ளாமல் ஜனநாயகக்கடமையாற்ற நேரில் வந்த நீங்கள் அனைத்து வாக்காளர்களுக்கும் ஒரு முன் உதாரணமாக திகழ்கின்றீர்கள். தள்ளாத வயதிலும் வாக்களிப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாக்களிக்க ஆர்வமுடன் வாக்குச்சாவடி மையத்திற்கு நேரில் வருகை தந்தமைக்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், தேர்தல் ஆணையத்தின் சார்பிலும் உங்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்று இருகரம் கூப்பி நன்றி தெரிவித்து பாராட்டினார். இந்த நிகழ்ச்சி அங்கிருந்த அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

முன்னதாக, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கவுண்டம் பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு

செய்தார். வாக்காளர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் பின்பற்றப்பட்ட பிறகே வாக்களிக்க அனுமதிக்கப் படுகிறார்களா என்றும், வாக்குச்சாவடி மையத்தில் சீராக வாக்குப்பதிவு நடைபெறுகிறதா என்றும் பார்வையிட்ட மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் அங்கிருந்த முகவர்களிடம் ஏதேனும் குறைபாடு உள்ளதா என்றும் கேட்டறிந்தார்.

கவுண்டம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி எண்.100 மாதிரி வாக்குச் சாவடியாகவும், பெண்கள் மட்டுமே பணியாற்றக்கூடிய வாக்குச்சாவடியாகவும் (ALL WOMEN POLLING STATION) அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்களிக்க வருகைதரும் மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதா என்றும், அவர்களை அழைத்துச் செல்வதற்கு தன்னார்வலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனரா என்றும், வாக்குச்சாவடி மையத்தில் உள்ள சிசிடிவி கேமராக்கள் வாக்குச்சாவடி மையம் முழுவதையும் படம் பிடிக்கும் வகையில் பொருத்தப்பட்டுள்ளதா என்றும் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் வாக்குப்பதிவு அலுவலரிடம் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் இதுவரை எத்தனை சதவீத வாக்குகள் பதிவாகி இருக்கிறது என்ற விவரம் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, கரூர் சட்டமன்றத்தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.எஸ்.என்.பாலசுப்பிரமணியன், கரூர் நகராட்சி ஆணையர் திருமதி.சுதா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு.சக்திவேல்(கரூர்), திரு.பன்னீர்செல்வம்(அரவக்குறிச்சி), நகராட்சி பொறியாளர் திரு.நக்கீரன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**